ஸ்ரீ ராமஜெயம்

விகாரி வருஷ (2019 - 2020)

விசேஷ தினங்களும், தேவ, பித்ரு, பூஜா ஸங்கல்பங்களும் அடங்கிய

# பஞ்சாங்கம்

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

(REGD.)

பிளாட் # 22, ஆழ்வார்திருநகர் அனெக்ஸ் 2வது மெயின் ரோடு,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.
E-mail : ksmani1967@gmail.com
Website : **www.nkmysamithi.org**



தொகுப்பாளர்

**K.S. மணி சாஸ்திரிகள்** (சென்னை)

மொபைல் : 98410 26438, 86102 90266

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

## ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் வேதபரிபாலன டிரஸ்ட் வேத பாடசாலை

ஆழ்வார் திருநகர், சென்னை–600 087.



## ரிக் வேத பாடசாலை

135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்




# JAI JAGADAMBA



## அகில லோக ஸ்ரீ தச மஹா வித்யா பீடம் டிரஸ்ட்

நெ.8/15, தாரகேஸ்வரி நகர், 1 வது தெரு,
செம்பாக்கம், கிழக்கு தாம்பரம், சென்னை 600 073, இந்தியா.  Tel. 044-22780241



## ஸ்ரீ காஞ்சி ஸ்ரீஸ்ரீ பரமாச்சார்ய மஹா ஸ்வாமிகள்

நீதி சாஸ்திரத்தில் ஸ்த்ரீகளுக்கும் ஷட்கர்மா சொல்லியிருக்கிறது என்னென்ன? ஒன்று: கார்யேஷு தாஸீ– வேலைக்காரியாகக் காரியம் பண்ணுவது. இரண்டு : கரணேஷு மந்திரீ – பதிக்கு ஆலோசனை சொல்வதில் மந்திரியாக இருக்க வேண்டும். தான் வைத்ததே சட்டம் என்று பதி இல்லாமல் பத்தினியின் ஆலோசனை கலந்தே எதுவும் பண்ண வேண்டும். மூன்றாவதாக : ரூபேஷு லக்ஷ்மீ – தோற்றத்தில் லக்ஷ்மியாக, அதாவது லக்ஷ்மீகரமாக இருக்க வேண்டும். மனு சாஸ்திரத்திலும் க்ருஹிணிக்கும் மஹாலக்ஷ்மிக்கும் பேதமில்லை என்று வருகிறது. நாலாவதாக : ஷமயாதரித்ரீ–ரூபத்தினால் ஸ்ரீதேவியாக இருப்பவள். பொறுமையால் பூமாத்ததேவியாக இருக்க வேண்டும். ஐந்தாவது : ஸ்நேஹச : மாதா என்பது இங்கேதான் ஸ்திரீக்கும் தர்மம் எவ்வளவு உச்சஸ்தானம் கொடுத்திருக்கிறது என்று தெரிகிறது. அன்பு காட்டுவதில் ஒருதாய் குழந்தையிடம் அப்படியிருப்பாளோ. அப்படியே பத்னி பதியிடம் இருக்க வேண்டும். ஆறாவது, அவள் பதிக்குச் சிற்றின்பம் அளிப்பவளாயும் இருக்க வேண்டும். ‘சயநே து வேச்யா’, கார்யேஷு தாஸீ, கரணேஷு மந்த்ரீ, ருபேஷு லக்ஷ்மீ க்ஷமயா தரித்ரீ! ஸ்நேஹ ச மாதா, சயநேது வேச்யா ஷட்கர்ம யுக்தா குலதர்ம பத்நீ!!

## ஸ்ரீஸ்ரீ காஞ்சி ஜயேந்திர ஸ்வாமிகள்




இப்போது நாம் தெரிந்து கொண்டிருக்கிற புராணங்களிலுள்ள பக்தி வேதத்திலே இருக்கிறது. ஆனால் அதோடு கூட ஏகப்பட்ட கர்மாவும் இருக்கிறது. பக்தியையே பூஜை என்ற கர்மாவாகப் பண்ணும்போது அதற்கும் நிறைய விதிகள் இருக்கின்றன. பூஜையோடு கூட அநேக யாகங்கள், சிராத்தம், தர்ப்பணம் எல்லாம் வேத தர்மத்துக்கு வெகு முக்கியமாக இருக்கின்றன. வேதத்தில் இத்தனையும் இருக்கின்றன. ஆனால் ஒரே இடத்தில் எல்லாவற்றையும் முறைப்படுத்தி கொடுத்திருக்கவில்லை. ஒவ்வொரு கர்மாவுக்கும் Procedure விரித்துச் சொல்லியிருக்கவில்லை. ‘வேதோ (அ) கிலோ தர்ம மூலம்’ என்று மநு சொல்கிறபடி வேதந்தான் நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்ற நெறிகளுக்கும் காரியங்களுக்கும் மூலமாக, வேராக, ஊற்றாக இருக்கிறது.



## ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

தினமுமே இப்பொழுதெல்லாம் பட்டணங்களில் நிறைய உபந்நியாஸங்கள் நடக்கின்றன. நியூஸ் பேப்பர்களில் ‘எங்கேஸ்மெண்ட்’ காலத்தைப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமா இருக்கிறது. நான் கூடக் கேள்விப்படாத மதவிஷயங்கள், கதை புராணங்களில் உபந்நியாஸங்கள் நடக்கின்றன. ஜனங்களும் கூட்டம் கூட்டமாக இவற்றுக்குப் போகிறார்கள். ரொம்பவும் நாகரிகமான வழியில் இருக்கப்பட்டவர்கள் படித்த யுவர்கள், யுவதிகள் கூட இவற்றுக்கு வருகிறார்கள் என்று தெரிகிறது. நடுவாந்திரத்தில் இருந்த நிலையோடு பார்க்கும்போது இதை ஒரு (மறுமலர்ச்சி) என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது. பகவான் நினைவை உண்டாக்குவதுதான் ரஸம். அதையும் புராணத்தில் சொல்லி இருக்கிற பிரகாரம், இதற்கு முக்கியமாக ஸ்வாநுபூதி இருக்க வேண்டும்.

## ச்ருங்கேரி ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள்



நமக்கு ஸம்சாரம் (பிறப்பும் இறப்பும்) இருந்துகொண்டேதான் இருக்கும். அதனால் பாபம், புண்ணியம் இரண்டும் நமக்கு இடைஞ்சலேயேதான் கொடுக்கின்றன. பாபங்களுக்காகப் பிராயச்சித்தங்களிருக்கின்றன. நாம், ‘என்ன பாபத்தைச் செய்கிறோம், எதைச் செய்யவதில்லை’ என்று எண்ணிக்கொண்டு கூட இருக்கலாம்.

‘அனிச்சயா(அ) ஸம்ஸ் ப்ருஷ்டோ  தஹத்யேவ ஹி பாவக’

(விரும்பாமல் தொட்டாலும் நெருப்பு நிச்சயம் சுட்டுவிடுகிறது) அதைப்போல், எப்பேர்ப்பட்ட தீயவராக இருந்தாலும் பகவான் நாமா (பெயர்) நம்மைக் காப்பாற்றிவிடும், நெருப்பு என்று தெரிந்து கையை வைத்தாலும், நெருப்பு கையை எரித்துவிடத் தான் செய்யும். அக்னியின் இயல்பு என்னவென்றால், எந்தப் பொருள் அதனருகில் வருமோ அதைச் சுட்டுவிடும். அதேபோல் பகவானின் சுபாவம் என்னவென்றால், எவர் பகவானின் நாமத்தை சொல்வாரோ, அவருடைய பாபத்தை அந்த நாமா நாசம் செய்துவிடும், ஆதலால் நாம் எந்தக் காரியத்தை எப்போது செய்து கொண்டிருந்தாலும் மனத்தால் மட்டும் பகவான் நாமாவை எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.



## ஸ்ரீஸ்ரீ அண்ணா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

ஆனந்தம் என்பது ப்ரம்மஸ்வரூபம். உலக ஆனந்தம் என்பதல்ல. ப்ரம்மஸ்வரூபம், இந்த உலகானந்தம். அல்பமானது. அழியக்கூடியது. ஆசைப்படும் சுகத்திற்கு எல்லாம் எல்லை உண்டு; முடிவு உண்டு. இந்த ஆனந்தமே நிலையானது என்று எண்ணி இறுமாந்திருக்கும்போதே மரணம் என்பது தெரிகிறதே. மரணம் என்று ஒன்று எவருக்கும் நிச்சயம் உண்டு என்று தெரிந்தும் பரிகாரம் தேடுகிற வழியை நாடவில்லையே? இங்கு இவன் என்னதான் ஆசைப்பட்டாலும் எதுவும் இவன்கூட வரப்போவதில்லை. சொந்தபந்தங்கள் எதுவும் இவனை வழியனுப்பி வைக்குமே அல்லாது எதுவும் கூடவராது. வரப்போவதில்லை. சொந்தம் பந்தம் எல்லாம் சாவு வரைதான். இந்த மரணமும் எப்போது என்று தெரியாது. இன்றேயோ, நாளையோ அல்லது எப்போது என்பதை எவனும் அறிதியிட்டுக் கூற முடியாத நிலையில் உலகம் என்பது அநித்யம் என்று புரியவில்லையா?